# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.22/2023</u>

2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய XW–2 **வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சித்ரா | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது வட்டார போக்குவரத்து அலுவலகம் பெரம்பலூரில் பதிவறை எழுத்தராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு வழங்கிய அதிகார கடிதம் சா.சா.ஆ.3, MH12 LT6579 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் கொண்டுவந்துள்ளேன். அது சா.சா.ஆ.4, மேற்படி வாகனத்தின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லையென்று சோதனை அறிக்கை வழங்கப்பட்டு அபராதம் ரூ.5,000/– விதிக்கப்பட்டது. மேற்படி சோதனை அறிக்கை நகல் மற்றும் அபராத ரசீது நகல் சா.சா.ஆ.5,

**<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை</u>:**

அபராதத்தை ஓட்டுநர் செலுத்தியதாக அதில் குறிப்பு இல்லை என்றால் சரிதான். காவல் ஆய்வாளரின் வேண்டுகோளின் பேரில் மோட்டார்வாகன அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஓட்டுநர் தனிப்பட்ட முறையில் உரிமத்தின் தாக்கல் செய்ய மோட்டார் வாகன ஆய்வாளர் சட்டப்பூர்வமான அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் ஓட்டுநருக்கு மகாராஷ்டிரா மாநிலத்தில் ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால்சரிதான். அவருடைய ஓட்டுநர்

உரிமம் காலவாதியாகி நீட்டிப்பு செய்யப்பட்டதா என்பது குறித்து மகராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அலுவலகத்தில் நாங்கள் அறிக்கை எதுவும் கேட்கவில்லை. சரியான முறையில் ஆய்வு செய்யாமல் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.